www.Padasalai.Net

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடிதம் எண்.efile.3851/அக.இ2/2024 , நாள் 30-04-2024**

அனுப்புநர்
திரு. ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை –6.

அம்மையீர்,

பொருள் : பள்ளிக் கல்வித்துறை – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் – பணிசார் கோரிக்கைகள் – கல்வி மேலாண்மை தகவல் முறைமை வாயிலாக விண்ணப்பிக்க வழி வகை செய்திட கோருதல் தொடர்பாக .

*****

பள்ளிக் கல்வித்துறையின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறவும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மாணவர்களுக்கு உடனுக்குடன் சென்றடையவும், தரமான கல்வியை அனைத்து மாணவர்களும் பெற்றிடவும், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), (இடைநிலைக் கல்வி) (தனியார் பள்ளிகள்) மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் என மூன்று நிலையில் உள்ள அலுவலர்களைக் கொண்ட நிர்வாக கட்டமைப்புடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

2. கள அளவிலான இத்துறையின் செயல்பாட்டிற்கு பெரிதும் பங்களிக்கும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் விடுப்பு ஒப்பளிப்பு, ஊதிய உயர்வு, ஊக்க ஊதிய உயர்வு, பதவி உயர்வு, பணியிட மாறுதல், பதவி உயர்விற்கான ஊதிய நிர்ணயம், தேர்வுநிலை, / சிறப்பு நிலைக்கான ஊதிய நிர்ணயம் மற்றும் பணியில் இளையோருக்கு இணையாக மூத்தவரது ஊதியத்தை சமன் செய்து ஊதிய நிர்ணயம், ஓய்வூதிய பலன்கள் போன்ற பல்வேறு பணிசார்

www.Padasalai.Net

கோரிக்கைகளை உரிய அலுவலருக்கு கல்வி மேலாண்மை தகவல் முறைமையில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள் நுழைவு குறியீட்டை (login id) உபயோகித்து இணைய வழியில் விண்ணப்பித்து தங்களது கோரிக்கைகளை கால தாமதமின்றி தீர்வு பெற்றிட ஏதுவாகவும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய நிர்வாகத்திற்காகவும் EMIS தளத்தில் உரிய வழிவகை செய்திடுமாறு ( provision to be made in EMIS Portal for application of service requests) தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு செயலாளருக்காக.

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர் , சென்னை –6
தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை –6
தனியார் பள்ளிகள் இயக்குநர் சென்னை –6